**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE VANDAVASI.**

Calender :
Miscellaneous :
Preliminary Register : Case No.**C.C.No.29/2017**
Sessions :
Deposition of Witness for :
Prosecution/Defence/Court: PW2

Name : Kasthuri
Father's/Husband's Name : Manokaran
Village : Sathampoondi
Taluk : Vandavasi
Caste : --
Nationality : Indian
Religion : Hindu
Age : 60
Solemnly affirmed in accordance with the provisions of Act X of the day of 04.02.2019.

**முதல் விசாரணை** **அ.சா.2**

நான் சாத்தம்பூண்டியில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 எனது மகள் ஆவார். எதிரிகளை எனக்கு தெரியும். சுமார் 5 வருடங்களுக்கு முன்பு காலை 11.00 மணியளவில் நான் என் வீட்டிலிருந்தபோது 1ம் எதிரியானவர் என் வீட்டிற்கு வந்து அ.சா.1 மாத்திரை சாப்பிட்டுவிட்டு அவரது ஊரில் அவரது விட்டில் மயங்கி கிடப்பதாக என்னிடம் தகவல்சொன்னார். அதன் பிறகு அ.சா.1ஐ சிகிச்சைக்காக செங்கல்பட்டு மருத்துவமனைக்கு கொண்டு போய் சேர்த்தோம். மருத்துவமனையில் அ.சா.1 சிகிச்சையிலிருந்தபோது அவரை 1ம் எதிரியானவர் தன்னை வரவழைத்து அடித்து விட்டதாக என்னிடம் சொன்னார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்க விசாரணை**

நான் முதல் விசாரணையில் சொன்ன சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். அ.சா.1 சொல்லிதான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். அ.சா.1 சமபவத்தின் பிறகு எப்போது சுய நினைவிற்கு வந்தார் என்றால் அன்று மாலை வந்து விட்டார். இந்த வழக்கு சம்பவத்திற்கு பின்பாக வேறு அடிதடி சம்பவங்கள் எதிரிகளுக்கும், அசா.1ற்கும் நடந்ததா என்றால் இல்லை. போலிசார் அ.சா.1ஐ எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் அது அ.சா.1ற்கு தான் தெரியும். போலிசார் என்னிடம் வாக்குமூலம் பெற்றார்களா என்றால் வாங்கவில்லை. மாத்திரை சாப்பிட்டு அ.சா.1 மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்பு மீண்டும் போலிசார் என்னை விசாரணை செய்தார்களா

என்றால் இல்லை. அ.சா.1டம் வந்தவாசி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் எதிரியிடம் பேச கூடாது என்றும், நேரில் பார்க்ககூடாது என்றும் எழுதி வாக்குமூலம் பெற்றார்கள் என்றால் இல்லை.

**மறுவிசாரணை**

இல்லை